This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# ஒரு நடுப்பகல் மரணம்

## 1

ரஞ்சனி, பாகேஸ்ரீ, கானடா, தேஷ், எல்லாவற்றையும் கலர் கலராகக் கலந்து ஏதோ ஒரு பெண் தெய்வத்தைப் பாடிவிட்டு வித்வான் மத்யமாவதித்து முடித்தார். குழந்தைகள் குறுக்கே ஓடின. மிருதங்கம் உறைக்குள் மறைய, வயலின் பெட்டிக்குள் கட்டுப்பட்டது. அப்பா கவரில் ஆயிரம் ரூபாய் வெற்றிலைப் பாக்குடன் தந்தார். "தேவ கானமா இருந்தது. சாப்ட்டுட்டுப் போங்கோ."

உமா மாலையைக் கழற்றினாள். கழுத்துப் பட்டை 'தாங்க்ஸ்' என்றது. பக்கத்தில் நின்று கொண்டிருந்த பத்து மணி நேரக் கணவனை மறுபடி மறுபடி பார்த்து 'இவன் என் கணவன், இன்று எனக்குக் கல்யாணமாகிவிட்டது' என்று நிச்சயப்படுத்திக் கொண்டாள். "அப்பாடா, உக்காரலாம்" என்றான். அவளைப் பார்த்துச் சிரித்தான். சற்றே தவறின பல்வரிசை. அந்தச் சிரிப்பு எனக்கே சொந்தம் என்கிற எண்ண மின்னல் உமாவின் உடம்பில் ஒரு தடவை சந்தோஷமாக ஊடுருவியது.

"இருங்க இருங்க! லாஸ்ட்டா ஒரு போட்டோ. ரெண்டு ஃபாமிலியையும் சேர்த்து எடுத்தாகணும். இல்லைன்னா அண்ணா கொன்னுடுவார்,"

உமா மறுபடி மாலையைப் போட்டுக் கொண்டாள். "வா, உக்காரு" என்று பக்கத்தில் தட்டினான். அவன் அருகில் உட்கார, மற்றவர்கள் அதே சோபாவில் நெருக்க, அவன் மேல் படவேண்டி இருந்தது. சந்தோஷமாக இருந்தது. அப்பா, அம்மா, மாமனார், மாமியார், இரண்டு பாட்டிகள், ஏழெட்டுக் குழந்தைகள், கைத்தடித் தாத்தாக்கள், "நானு, நானு" என்று ஈரக் கையைத் துடைத்துக் கொண்டு வந்து போட்டோவின் ஓரத்தில் ஒட்டிக்கொண்ட அத்தை.

திவ்யா ஓரத்தில் நின்றுகொண்டிருந்தாள்.

"திவ்யா நீயும் வாயேன்."

"இல்லைம்மா, நான் இங்க இருந்துண்டே பாக்கறேன்."

"சீ கூப்ட்டா வா!"

"இல்லைம்மா."

திவ்யாவைப் பார்த்தபோது வயிற்றில் கொஞ்சம் நேரம் குற்ற உணர்வு சங்கடப்படுத்தியது.

"வாங்க ப்ளீஸ்!" என்றார் மாப்பிள்ளை.